நகர் ஊரமைப்பு துறை
விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
அத்திகுளம் தெய்வேந்திரி ஊராட்சி

விருதுநகர் மாவட்டம்,ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்,ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், அத்திகுளம் தெய்வேந்திரி ஊராட்சி,ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமம், சர்வே.எண்கள்: **105/1, 108/2B,109/2A,2B2,2C1**-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லா பகுதி)

இணைய விண்ணப்ப எண் : **8EJ3W2BF**
அளவு : 1:400




குறிப்புகள்

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 1.61 ஏக்கர்(6537.00ச.மீ) |
| உத்தேச சாலையின் பரப்பளவு | – | 2309.03 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 4227.97 ச.மீ |
| மனுதாரர் உபயோக பகுதி - 1 | – | 53.81 ச.மீ |
| மனுதாரர் உபயோக பகுதி - 2 | – | 61.44 ச.மீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | – | |
| நிலையிலுள்ள சாலை | – | |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | – | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | – | 37 எண்ணம் |

ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| சாதாரண வகை மனைகள் (மனை எண்கள் : 1-30) | – | 30 எண்ணம் |
| ஒதுக்கப்பட்ட மொத்த மனைகளின் எண்ணிக்கை | – | 30 எண்ணம் |

பொது ஒதுக்கீடு

(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியது.)

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 4367/2019 நாள்:05.02.2020 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி (ம) கட்டிட விதிகள்-மனைப்பிரிவு விதி எண்:41(1) (ம) 47(6) படி 10% பூங்கா பரப்பளவிற்கு இணையான கட்டணத் தொகையினை அரசு வழிகாட்டின் மதிப்பின்படி மனுதாரால் செலுத்தப்பட்டது.)

| | | | |
|---|---|---|---|
| சாலை பரப்பு (தான ஆவண எண்:6463/2025,நாள்:18.09.2025) | : 2309.03 ச.மீ | | : |
| உள்ளாட்சி உபயோகத்திற்கு (தான ஆவண எண்:6463/2025,நாள்:18.09.2025) | : 26.22 ச.மீ | (0.62%) | : |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு (தான ஆவண எண்:6464/2025,நாள்:18.09.2025) | : 24.50 ச.மீ | (0.58%) | : |

மூலைமுடுக்கு

12.00மீ அகலச்சாலைகள் வரை 1.5மீx1.5மீ வரை விடப்பட வேண்டும்.

கட்டிடவரம்பு

7.2மீ மற்றும் 9.0மீ அகலச்சாலைகளுக்கு 1.5மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (ஆயு-1) நாள் 04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (ஆயு-1) நாள்-31.01.2020-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன்,இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்பஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகை பத்திரம் -பட்டா -தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4'-அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல
10. இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட கூடாது. கட்டப்பட்டு இருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
11. மனுதாரர் உபயோக பகுதியில் உள்ள கிணற்றினை சுற்றிலும் பொது மக்களின் பாதுகாப்பு கருதி 1.83மீ உயரத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும். இதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்பே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
12. மனுதாரர் உபயோக பகுதி-1 (ம) 2-னை மனையாக கருதக் கூடாது.
13. சர்வே எண்:109/2B1-ல் கைவசம் உள்ள கிணறு மனுதாரர் பெயரில் உள்ளதால் உத்தேச மனைப்பிரிவில் மனுதாரர் உபயோக பகுதி-2 ன் இடத்தினை கிணற்றுடன் சேர்த்து கிணற்று பகுதியாகவே பராமறிக்கப்பட வேண்டும்.

குறிப்பு

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.து.இ.(விருமா) எண்: 152/2025

ிவரைவாளர் வரைவாளர் நிலை-III மேற்பார்வையாளர் உதவி இயக்குநர்

Signature Not Verified
Signature Not Verified

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
விருதுநகர் மாவட்டம்